DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.240/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | சாந்தகுமார் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 21.04.2026**

போலிசார் வங்கிக்கு எவ்வாறு வந்தார்கள் என்றால் வாதி சுகண்யா அழைத்ததன் பேரில் வந்தார்கள். போலிசார் அங்கு வந்ததற்கு பின்னிட்டுதான் நான் வாதி சுகண்யாவின் கேபினுக்குள் சென்றேன் என்றால் சரியல்ல. நான் முன்னரே சென்றுவிட்டேன். என்னுடன் யார் யார் உடன் வந்தார்கள் என்றால் நான் மட்டும்தான் சென்றேன். நான் கேபினுக்குள் சென்றதற்கு பின்னிட்டுதான் எதிரி அங்கு வந்தார் என்றால் சரிதான். பின்னிட்டு எவ்வளவு நேரம் கழித்து அங்கு வந்தார்கள் என்றால் சுமார் 15 நிமிடங்கள் கழித்து வந்தார்கள். சம்பவத்தின்போது வங்கியில் பணிபுரியும் மற்ற ஊழியர்கள் யாரும் அங்கு வந்தார்களா என்றால் வந்தார்கள்.

சம்பவ இடத்தில் இருந்து எதிரியை போலிசார் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். எதிரி வாதியின் கேபினுக்குள் செல்வதற்கு முன் வாதியின் கேபினுக்கு வெளியே எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தார் என்றால் சுமார் 5 நிமிடங்கள் அமர்ந்திருந்தார். எதிரி எப்போது வந்தாலும் வாதி பெல் அடித்து என்னை அழைப்பார்

நான் கேபினுக்குள் செல்வேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் வாதி சுகண்யா எங்களது வங்கியின் மூத்த மேலாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**